STC 488/2020

Date: 11.11.2021

P.W.1

குறுக்கு விசாரணை

பிரிவு 9 உடன் விதி 17 ன் கீழ் ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பறைகள் வழங்கப்படாதது மற்றும் பிரிவு 13 உடன் விதி 35 ன் கீழ் பொழுதுபோக்கு மையம் அமைக்கப்படாதது குறித்து புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது குறித்து ஆய்வில் குறைபாடு கண்டறியப்பட்டு ஆய்வு உத்தரவு அனுப்பப்பட்டு அதற்கு வேலை அளிப்பவர் அளித்த பதில் திருப்தியாக இருந்ததால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. முதல் விசாரணையில் பிரிவு 8 உடன் விதி 7 மற்றும் 82A ன் கீழ் தொழிலாளர்கள் குடிநீர் வழங்க ஆய்வாளரால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் எதற்காக ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விதி 82A ன் கீழ் வேலை அளிப்பவர் பராமரிக்க வேண்டிய ஆவணங்களை நான் பார்வையிட்டேன். குடிநீர் இணைப்பு போதுமானதாக இல்லை என்றும் எந்தெந்த இடங்களில் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்றும் எந்த இடங்களில் கொடுக்கவில்லை என்று புகார் எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. தொழிலாளர் உதவி ஆணையாளர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருந்ததா என்று பார்த்தேனா என்றால் இல்லை. குடிநீர் போதுமானதாக வழங்கப்படவில்லை என்று நான் கண்டறிந்தேனா என்றால் இல்லை. பிரிவு 8 உடன் விதி 7 ன் படி குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். விதி 7 முதல் 10 வரை சொல்லப்பட்டிருந்த வசதிகள் வேலை அளிப்பவரால் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். முதல் விசாரணையில் 4 வது குறைபாடாக விதி 84 ன் கீழ் வேலை அளிப்பவர் வேலை நேரப் பட்டியல் அறிவிப்பினை படிவம் 6 ல் காட்டி வைக்கப்படவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வேலை நேரம் மற்றும் தொழிலாளர்கள் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால்தான் அதுகுறித்து படிவம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். மாற்றம் ஏற்பட்டது நான் கண்டறிந்தேன் என்று குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். வேலை அளிப்பவர் நிறுவனத்தின் சம்பளத்துடன் கூடிய விடுப்பு பதிவேட்டை நான் பார்வையிட்டேன். பதிவேட்டில் முறையாக பராமரிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றும் என்ன குறைபாடு காணப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். குறைபாடு குறிப்பிட்டு சொல்லாததால் வேலை அளிப்பவர் குறைபாட்டை நிவிர்த்தி செய்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 6 வது குறைபாடாக சொல்லியுள்ள வேலை அளிப்பவர் குறித்த விவரங்கள் அடங்கிய படிவம் 23 ஐ ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் தாக்கல் செய்தால் போதும் என்றால் சரிதான். படிவம் தாக்கல் செய்வதற்கு எந்த வகையான ஆதாரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 7 வது குறைபாடாக சொல்லப்பட்டுள்ள போர்வை உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்கள் வழங்கப்படுவது குறித்து தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைமுறைகள் நிலுவையில் இருந்தது என்றால் அது குறித்து நான் கண்டறியவில்லை. பாதுகாப்பு பொருட்கள் கொடுக்கப்பட்டதா என்பது குறித்து பதிவேட்டை ஆய்வு செய்தேன். அவை கொடுக்கப்பட்டிருந்தது. பதிவேடு சரியாக இருந்தது. வேலை அளிப்பவர் அளித்த பதிலில் தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைமுறைகள் நிலுவையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவர்களது சங்கத்தின் மூலமாக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். அந்த விவரத்தை நான் ஆராய்ந்து பார்த்தேன். விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எந்த வகையில் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்று வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நடைமுறைகள் குறித்து எனது அலுவலகத்தில் இருந்து தொழிலாளர் இணை ஆணையரிடம் கடிதம் மூலமாக விசாரித்தேனா என்றால் இல்லை. வேலை அளிப்பவர் அளித்த விளக்கத்தை தவறு என்று எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். 8வதாக சொல்லப்பட்டுள்ள குறைபாடு பணிபுத்தக பதிவேட்டை நான் பார்வையிட்டேன். தொழிலாளர்களிடம் விசாரித்து அதற்கேற்ப்ப பணிபுத்தக பதிவேட்டில் மாறுதல் ஏற்படவில்லை என்று கண்டறிந்தேனா என்றால் கண்டறிந்தேன். ஆனால் அது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தொழிலாளர்களிடம் விசாரித்து குறைபாடுகளை கண்டறிந்து அது குறித்து வேலை அளிப்பவருக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. தொழிலாளர்கள் விவரங்களில் எந்த மாற்றங்களும் ஏற்படாத நிலையில் பணிபுத்தக பதிவேட்டில் கலம் 6 மற்றும்

7 ல் என்ன மாற்றமும் செய்ய தேவையில்லை என்றால் சரிதான். பதிவேட்டில் குறைபாடுகள் இல்லை என்றால் சரியல்ல. பணிபதிவேட்டில் தொழிலாளர் சம்பந்தமான அனைத்து தகவல்களும் அனைத்து சட்டங்களுக்குட்பட்டு பதிவு செய்யப்படும் ஒரு நிரந்தர ஆவணம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எந்த தொழிலாளரிடம் பஞ்சப்படி குறித்து விசாரித்து காலம் 6 மற்றும் 7 ல் குறைபாடு உள்ளதாக கண்டறிந்தேன் என்றால் விசாரிக்க தேவையில்லை என்பதால் விசாரிக்கவில்லை. சட்டப்படி தொழிலாளர்களை விசாரிக்க எந்த தடையும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த குறைபாடும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு முன்மொழிவில் தேதிகள் தவறாக குறிப்பிட்டு வழக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தமிழ்நாடு அரசாணையில் 149/2018 ன் படி வேலை அளிப்பவர் படிவம் 28 ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பித்திருந்தால் தோட்ட தொழிலாளர் சட்டத்தின் கீழ் தனியாக சமர்ப்பிக்க தேவையில்லை என்றால் சரியல்ல. உரிய தேதிக்குள் படிவம் 28 சமர்ப்பித்திருந்தால் தனியாக சமர்பிக்க தேவையில்லை. உரிய தேதிக்குள் படிவம் 28 வேலை அளிப்பவரால் அனுப்பப்பட்டு எனது அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதா என்று சரிபார்த்தேன். அவ்வாறு சரிபார்த்த விவரத்தை வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு அரசாணை எண் 151/2017 செயல்பாட்டுக்கு வரவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. தொழிலாளர் ஆணையர் அலுவலக ந.க. எண் 1/2/21304/2015, நாள் 09.08.2019 தேதியிட்ட குறிப்பாணை படி ஆய்வு மேற்கொண்டு 48 மணி நேரத்திற்குள் ஆய்வு உத்தரவு கொடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த குறைபாடுகளை 15 நாட்களுக்குள் சரி செய்ய எதிரி நிறுவனத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு கொடுத்த பின்பு வாய்ப்பை பயன்படுத்த தவறும்பட்சத்தில் ஏன் நிவர்த்தி செய்யவில்லை என்று கேட்டு அதன் பிறகு குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி அனைத்து கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உதவி ஆணையர் தோட்ட நிறுவனங்கள் ஆகியோர் உத்தரவு போட்டு அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டிய நிறுவனங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது மேலும் மேற்கண்டி அதிகாரிகள் துணை ஆய்வர், உதவி ஆய்வர் ஆகியோருக்கும் மேற்கண்ட விவரங்களை தெரிவித்து நடவடிக்கை எடுக்க அந்த குறிப்பாணை வலியுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் பின்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு அனுமதி கோரி

அனுப்பப்பட்ட வழக்கு முன்மொழிவில் மேற்குறிப்பிட்ட குறிப்பாணை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது ஆய்வு சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. வழக்கு அனுமதி ஆணை உண்மையை மறைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஆய்வு மற்றும் வழக்கை சட்டவிரோதமாக வேலை அளிப்பவர் மீது போட்டதால் நல்லெண்ண அடிப்படையிலான பாதுகாப்பு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வேலை அளிப்பவர் என் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பணியாற்றிய இடத்தில் இதுபோன்று சட்டவிரோத நடவடிக்கை எடுத்ததால் புகாரின் அடிப்படையில் கன்னியாகுமரிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல.